# தொல்காப்பியம் அகத்திணையியலில் நூற்பா வைப்புமுறையும் சிக்கல்களும்

சுதாகரன் விதுர்சியா,

இணைப்பாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
மட்டக்களப்பு பிராந்தியம்.

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகில் இன்று வாழும் மொழிகளில் தமிழ்மொழியே முதன்மை செம்மொழியாகும். தமிழின் உயர்வுக்கு காரணம் அதன் தொன்மையும் செழுமையும் கொண்ட தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். தொல்காப்பியத்தில் பொருளதிகாரம் அக்காலத் தமிழ்மொழியின் உயர் நிலையையும், தமிழரின் அறிவியல் ஆழத்தையும், பண்பாட்டு விழுமியங்களையும், மரபுகளையும் எடுத்துக்கூறும் ஓர் அதிகாரமாகும். பொருளதிகாரத்தின் இத் தனிதன்மை காரணமாக தொல்காப்பியம் ஓர் இலக்கியமாகவும் கொள்ளப்படுகிறது.*

*தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் நூற்பாக்கள் வைப்புமுறையில் பல சிக்கல்களும் வேறுபாடுகளும் காணப்படுகின்றன. அதிலும் அகத்திணையியலை குறிப்பாக நோக்கினால், இச்சிக்கல்கள் மலிந்து காணப்படுகிறது. சில நூற்பாக்கள் இடம்மாறியும் சில நூற்பாக்கள் விடுபட்டும் இருப்பதை எம்மால் அவதானிக்க முடிந்தது. அவற்றை இணங்காண்பதோடு மட்டுமன்றி, அதற்கான காரணங்களை முன்வைப்பதும் இவ்வாய்வின் நோக்கமாகக் அமைந்துள்ளது.*

**திறவுச் சொற்கள்:** *தொல்காப்பியம்,நூற்பா, வைப்புமுறை, அகத்திணை,நிலம்*

**Abstract**

Among the languages spoken in the world today, Tamil stands as the foremost classical language. The reason for the eminence of Tamil lies in its antiquity and richness, embodied in the grammatical treatise Tolkappiyam. Within Tolkappiyam, the Poruḷatikaram (Book of Meaning) is a section that reflects the elevated status of the Tamil language of its time, as well as the intellectual depth, cultural values, and traditions of the Tamil people. Owing to this distinctive nature of the Poruḷatikaram, Tolkappiyam is also regarded as a literary work.

In the Poruḷatikaram of Tolkappiyam, several complexities and variations are observed in the arrangement of the sutras (verses). When the Akattiṇaiyiyal (theory of interior/inner landscapes) is examined in particular, these issues appear more pronounced. It can be observed that certain sutras have been displaced from their original positions, while some others appear to be missing. The objective of this research is not only to identify and correlate these irregularities, but also to propose the possible reasons underlying them.

Keywords: Tolkappiyam, sutra, arrangement, Akattiṇai, landscape

**அறிமுகம்**

தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களைக் கொண்டது. ஓவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது. தொல்காப்பியம் தமிழுக்கான இலக்கண நூல் எனினும், இந்நூல் பண்டைய தமிழ் மக்களின் வாழ்வுக்கான இலக்கண நூலாகவும் திகழ்கின்றது. தமிழ் மக்களின் வாழ்வியலைப் பேசும் இதன் பொருளதிகாரம் கீழ்க்கண்ட ஒன்பது இயல்களைக் கொண்டது. அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் ஆகியன அவை. மூலச்சிறப்புள்ள தமிழ்ச் சிந்தனைக்கு அறிவியல் அடிப்படையை வழங்கிய தொல்காப்பியரின் எண்ணியச் சிந்தனையை கொண்டதாக தொல்காப்பியம் விளங்குகின்றது.



© 2026, IRJTSR

**அகத்திணையியலில் நூற்பா வைப்புமுறையும் சிக்கல்களும்**

தொல்காப்பியம் முற்காலத்தில் ஏட்டிலே எழுதப்பட்டிருந்தமையாலும், பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே உரை எழுதப்பட்டமையாலும் நூற்பா வைப்பு முறையில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. பொருள் தொடர்ச்சிக்குத் தேவையான நூற்பாக்கள் காணப்படாமை, நூற்பாக்களின் முறைவைப்பு கருத்தோட்டத்தின் இயைபுக்குப் பொருந்தாமை, பொருளை விரித்துரைக்கும் நூற்பாக்களிடையே சீர்மைத் தன்மை காணப்படாமை, நூற்பாக்கள் சிதைந்த நிலைமை, பல்வேறுபட்ட பாட வேறுபாடுகளைக் கொண்டிருத்தல் எனப் பல நிலைகளில் பொருளதிகார மூலம் சிதைக்கப்பட்டிருப்பதை காணலாம். இத்தகைய சிதைவுகள் புறத்திணையியலைவிட அகத்திணையியலில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இதனாலேயே உரை வேறுபாடுகள் தோன்றுகின்றன. அகத்திணை முதலாக மரபியல் ஈறாக உள்ள ஒன்பது இயல்களின் முறைவைப்பில் உரைக்காரர்களிடையே வேறுபாடுகள் காணப்படவில்லை. நூற்பாக்களின் எண்ணிக்கையிலும், அவற்றிற்கு பொருள் காண்பதிலும் கருத்து வேறுபாடுகள் மலிந்து காணப்படுகின்றன.

“கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளர்ந்த எழுதிணை என்ப.”

அகத்திணையியலில் முதலில் உள்ள மேற்குறிப்பிட்ட நூற்பாவானது இந்த இயலின் தலைமைச் சூத்திரம் தானா, இதற்கு முன்னர் வேறு நூற்பாக்கள் இருந்தனவா என்னும் ஐயம் எழுகிறது.‘முற்படக் கிளர்ந்த’ என்னும் தொடருக்கு பொருள் காண்பதிலும் சிக்கல்கள் ஏற்படுகின்றது. பொருளதிகாரத்தின் முதலில் பொருளானது அகம், புறம் என இருவகைப்படும் என்பதும், அகத்திணை ஏழு என்பதும், இவ்வகத்திணையும் அன்பின் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை என ஏழாக வகுக்கப்படும் ஆகிய விடயங்களை சுட்டிய சில சூத்திரங்கள் அகத்திணையின் முதற்கண் இச்சூத்திரத்துக்கு முன்னே ஆசிரியரால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ‘முற்படக் கிளர்ந்த’ எனும் தொடருக்கு “இதற்கு முன்னர் ஆசிரியர் கூறிப்போந்த என்று பொருள் காண்பதே பொருத்தமாகும்” என்று இளம்பூரணர் கூறுவதை நோக்குமிடத்து இது தலைச் சூத்திரம் தானா என்னும் ஐயம் வலுவடைகிறது. முற்படக் கிளர்த்தல் என்ற சொல்லுக்கு சொல்லதிகாரத்தினுள் நான்கு இடங்களில் (38, 39, 41, 279 ஆகிய நூற்பாக்கள்) ‘முன் கூறி’ ’,‘முன் சொல்லி’ என்று இளம்பூரணார் பொருள் காண்கிறார். அத்தோடு எழுத்ததிகாரம் இரண்டு இடங்களிலும் (1, 178 ஆகிய நூற்பாக்கள்) மேற்கண்டவாறு பொருள் காண்கிறார். இவ்வாறாக ஆறு இடங்களிலும் முற்கிளந்த என்பதற்கு முற்படக் கூறிய (அகத்திணையினுள்) எனவும் மேற்கூறப்பட்டன எனவும் இளம்பூரணர் பொருள் கொள்கின்றார். இவ்வாறு ஆறு இடங்களில் மேலே சொல்லப்பட்ட என்று கூறிய இளம்பூரணர், இவ் ஒரு நூற்பாவிற்கு மட்டும் ‘முதலில் கூறப்பட்டன’ என்று கூறியது சிந்திக்கத்தக்க விடயமாகும். எனவே இதிலிருந்து இதற்குமுன் நூற்பாக்கள் இருந்து அழிந்து போயிருக்கலாம் என்பதை ஊகிக்க முடிந்தது.அடுத்ததாக,

“அவற்றுள்

நடுவன் ஐந்திணை நடுவண தொழியப்

படுதிரை வையம் பாத்தியப் பண்பே.”எனும் இரண்டாவது நூற்பாவில் பாலை தவிர்ந்த ஏனைய நான்கு திணைகளுமே நானிலங்களாக வகுக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறது. மூன்றாவது நூற்பாவாகிய,“முதல்கரு வுரிப்பொருள் என்ற மூன்றே ….” என்பதில் முதல், கரு, உரிப்பொருட்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. அவற்றுள் முதல் பொருளின் பிரிவுகளாக நிலம் பொழுது பற்றி “முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்…”என்னும் நான்காவது நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். ஐந்தாவது நூற்பாவான “மாயோன் மேய காடுறை உலகமுஞ்..” கருப்பொருளான தெய்வங்கள் அதாவது நானிலங்களும் உறையும் தெய்வங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. 6 – 12 வரையான நூற்பாக்களில் பொழுதுகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றன. ஆறாவது நூற்பாவாகிய “காரும் மாலையும் முல்லை..” என்பதில் கார்காலமும் மாலைப்பொழுதும் முல்லைக்கான பெரும்பொழுதும் சிறுபொழுதும் என்றும், ஏழாவது

நூற்பாவாகிய "குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்…" என்பதில் கூதிர் காலமும் யாமப் பொழுதும் குறிஞ்சிக்கான பெரும்பொழுதும் சிறுபொழுதும் என்றும்,"பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப…" எனும் எட்டாவது நூற்பாவில் முன்பனிக்காலமும் குறிஞ்சிக்கான பெரும்பொழுதாகும் எனவும், ஒன்பதாவது நூற்பாவாகிய "வைகறை விடியல் மருதம்…" என்பதில் வைகறை விடியலும் மருதத்துக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும் எனவும், எற்பாடு நெய்தல் ஆதல்.." எனும் பத்தாவது நூற்பாவில் நெய்தலுக்குரிய சிறுபொழுதுகளும்,"நடுவுநிலைத் திணையே நண்பகல்.." என்னும் பதினோராவது நூற்பாவில் பாலைநிலத்துக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும், பன்னிரண்டாவது நூற்பாவாகிய "பின்பனி தானும் உரிதிதென மொழிப.." என்பதிலும் பாலைக்கான பொழுதுகளும் முறையே கூறப்பட்டுள்ளது. ஆயினும் நான்காவது குறளில் முதலின் பகுதிகளான நிலமும் பொழுதும் கூறப்பட்டுள்ளது. பொழுதுகள் இதனை அடுத்தே வரவேண்டும். ஆனால் கருப்பொருட்களே அடுத்த நூற்பாவில் இடம்பெற்றுள்ளது என்பதும் சிந்திக்கத்தக்கது.

பதின்மூன்றாவது நூற்பாவான "இருவகைப் பிரிவும் விலைபெறத் தோன்றும்.."என்பதில் பாலை நிலத்துக்குரிய பிரிவு பற்றியும் அது இரண்டு வகைப்படும் எனவும் கூறப்படுகிறது. தொல்காப்பியர் முதல் கரு பற்றிக் கூறி வருகையில் இடையே எவ்விதத் தொடர்புமின்றி பிரிவு பற்றிய நூற்பா வருவதை அவதானிக்க முடிகின்றது. ஆசிரியர் நூல் செய்து ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் கழித்த பின்னரே, இளம்பூரணர் முதலானோர் உரையெழுத முற்பட்டனர். இவர்களுக்கு முன்னர் இந்நூலைக் கற்றோரும், கற்பித்தோரும், கையால் எழுதியோரும் ஆக எத்தனையோ பேரால் நூற்பாக்களில் என்னென்ன மாற்றங்கள் நேர்ந்தன என்று நம்மால் இப்பொழுது அறியமுடியவில்லை. என்றாலும் உரையாசிரியர் காலத்துக்கு முன்பே சில பல நூற்பாக்கள் இடம் மாறியெழுதப்பட்டும் கோர்க்கப்பட்டும் இருந்திருக்கலாம் என்று எண்ணலாம்.

அடுத்த 15ஆவது நூற்பாவான "உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே.." என்பதிலும் திணைமயக்கம் பற்றியே கூறுகிறார். தொல்காப்பியர் முதல் கரு பற்றிக் கூறிவரும் போது இடையே திணைமயக்கம் ( 14,15) பற்றிக்கூறுவதும் ஓர் ஒழுங்கற்ற தன்மையைக் காட்டுகிறது.

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்.." என்ற 16வது நூற்பாவில் ஐந்திணைகளுக்கும் உரிய உரிப்பொருள் பற்றிக் கூறப்படுகின்றது. "கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவன்…" என்ற 17வது நூற்பாவில் பிரிவு பற்றிக் கூறப்படுகின்றது. இதுவும் இவ்விடத்துக்கு பொருத்தமற்ற ஒழுங்கற்ற கன்மையில் அமைந்திருப்பதைக் காணலாம். "கலந்த பொழுதும் காட்சியும் அன்ன" என்னும் 18வது நூற்பாவில் பிரிவின்போது நடக்கும் காட்சி (புணர்தல்) பற்றிக் கூறப்பட்டுள்ளது.

அடுத்ததாக "முதலெனப்படுவது.." என்னும் 19வது நூற்பாவில் முதல் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.முதலின் வகைகள் பற்றி நான்காம் நூற்பாவில் கூறியுள்ளார். ஆகவே முதல் என்றால் என்ன என்று கூறிய பின்னரே இதன் வகைகள் கூறவேண்டும் என்பது இயல்பு. ஆகவே இந்நூற்பா நான்காம் நூற்பாவுக்கு முன் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் "தெய்வம் உணாவே மாமரம்…" என்ற 20வது நூற்பாவில் கருப்பொருட்கள் எவை என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது."எந்நில மருங்கின்…" என்னும் 21வது நூற்பாவில் திணைமயக்கம் பற்றிக் கூறப்பட்டுள்ளது."பெயரும் வினையுமென்று…" என்ற 22வது நூற்பாவில் திணைப்பெயர் என்றால் என்ன, திணைநிலைப்பெயர் என்றால் என்ன என்பது பற்றிக் கூறப்படுகிறது.

"ஆயர் வேட்டுவர்.." என்ற 23வது நூற்பாவில் திணைப்பெயரினுள் யார் யார் வரலாம் என்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. "ஏனோர் மருங்கினும்.."என்ற 24வது நூற்பாவில் விதிவிலக்கிற்குள் வரும் விடயங்கள் பற்றிக் கூறியுள்ளார்."அடியோர் பாங்கினும்.." என்ற 25வது நூற்பாவில் அடியவர்கள், குற்றேவல் செய்பவர்கள் பற்றிக் கூறப்படுகிறது."ஏவல்மரபின் ஏனோரும்…."என்ற 26வது நூற்பாவில் ஏவல் மரபுக்குரியவர்கள்தலைமக்கனாக வரலாம்

எனக் கூறப்பட்டுள்ளது. அடுத்ததாக 27 – 37 வரையான நூற்பாக்கள் பிரிவுகள் பற்றிக் கூறப்படுகின்றது. "ஓதல் பகையே…" என்ற 27வது நூற்பாவில் பிரிவு நடப்பதற்கான காரணங்கள் (ஓதல், பகை,தூது) சொல்லப்பட்டுள்ளது. " அவற்றுள் ஓதலும்.."என்ற 28வது நூற்பாவில் ஓதலும் தூதும் பிரிவில் உயர்ந்ததாக கூறப்பட்டுள்ளது.

"தானே சேறலும்.." என்ற 29வது நூற்பாவில் வேந்தன் தானே போவான் தன்னோடு மற்றவர்களை (துணை அரசர்கள்) அழைத்துக் கொண்டும் போவான் என்று வேந்தனின் பிரிவு கூறப்பட்டுள்ளது. "மேனிய சிறப்பின்…" என்னும் 30வது நூற்பாவில் பொருளை ஈட்டுவதற்கு பிரிதலும் பிரிவு என கூறப்பட்டுள்ளது. "மேனிய முறைமை…"என்ற 31வது நூற்பாவில் தெய்வத்துக்கு உரிய எல்லாம் நால்வகை வர்ணத்தாருக்கும் உரியன என்கின்றார். ஆனால் நால்வகை வர்ணத்தாரும் யார் என்று கூறவில்லை. உரையாசிரியர்கள் அதில் தமது கருத்துக்களையே கூறுகின்றனர். :மன்னர் பாங்கின்.." என்னும் 32வது நூற்பாவில் காவற்பிரிவு மன்னர்களுக்கு மட்டுமன்றி மன்னரின் பின்னரான வணிகர், வேளாளர்க்கும் உரியது என்கிறார். "உயர்ந்தோர்க் குரிய.." என்ற 33வது நூற்பாவில் உயர்ந்தோர் கல்வி கற்பதற்காகப் பிரியலாம் என்கிறார்.

"வேந்துவினை இயற்கை.." எனும் 34வது நூற்பாவில் தூது செல்லல் வேந்தனுக்குரிய பிரிவு என தொல்காப்பியர் கூறியுள்ளார். வணிகரும் வேளாளரும் வேந்தனுக்காக தூது செல்லக் கூடியவர்கள் என இளம்பூரணர் குறிப்பிடுகின்றார். "பொருள் வயின் பிரிதலும்:." என்ற 35வது நூற்பாவில் பொருள் ஈட்டப் பிரிதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதுவும் ஒழுங்கற்ற தன்மையில் அமைந்துள்ளது. 30வது நூற்பாவிலும் பொருள் ஈட்டப்பிரிதல் பற்றியே கூறப்பட்டுள்ளது. 30வது நூற்பாவை அடுத்து 35வது நூற்பா அமைதல் சிறப்பு."உயர்ந்தோர் பொருள்…" என்னும் 36வது நூற்பாவில் உயர்தோர் பொருளுக்காக பிரிதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இங்கு உயர்ந்தோர் என்பதன் மூலம் அந்தணர்களையே இளம்பூரணர் குறிப்பிடுகின்றார். "முந்நீர் வழக்கம்.." என்ற 37வது நூற்பாவில் கடலேறச் செல்லும்போது மகளிரை அழைத்துச் செல்வதில்லை என கூறியுள்ளார் தொல்காப்பியர்.

"எத்திணைமருங்கின்…" என்னும் 38வது நூற்பாவில் பெண்கள் மடலேறுதல் வழக்கமில்லை எனக் கூறப்பட்டுள்ளது. 39 - 45 வரையான நூற்பாக்களில் தலைவன் தலைவி உடன்போக்கின்போது இவர்கள் செல்வதை யார் யார் கூற்று நடத்தலாம் என கூறப்பட்டுள்ளது. "தன்னும் அவனும்.." என்னும் 39வது நூற்பாவில் நற்றாய் கூற்று அமைந்துள்ளது. "ஏமப் பேரூர்ச் சேரியும்…" என்ற 40வது நூற்பாவில் உடன்போக்கில் தலைவி சென்றதும் சேரிப்புறம், வழிகள் தோறும் தாய் தேடிப்போதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது. "அயலோர் ஆயினும்…" 41வது நூற்பாவில் பிரிவு பற்றிச் சொல்லியுள்ளார். அதாவது அருகில் போனாலும் பிரிவுதான், தூரத்தில் போனாலும் பிரிவுதான் என இதன்மூலம் கூறப்பட்டுள்ளது. ஆயினும் கூற்றுக்கள் பற்றி வரும்போது இடையில் இந்நூற்பா பிரிவு பற்றி தொடர்பற்று வருகிறது. எனவே 41வது நூற்பா பிரிவை பற்றிக் கூறும் 37வது நூற்பாவின் முன் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று கூறுவதே பொருத்தமுடையதாகும். "தலைவரும் விழும…" என்ற 42வது நூற்பாவில்தோழி கூற்று கூறப்பட்டுள்ளது.

"பொழுதும் ஆறும்…" என்னும் 43வது நூற்பாவில் கண்டோர் கூற்று பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஒன்றாத் தமரினும்…" 44வது நூற்பாவில் தலைவன் கூற்று வருகின்றது. எஞ்சியோர்க்கும் எஞ்சுதல்…" எனும் 45வது நூற்பாவில் ஏனையோர் கூற்று இடம்பெறுகிறது. தலைவி கூற்றுக்களை கூறும் தனி நூற்பா காணப்பெறவில்லை. இளம்பூரணர் தம்முடைய விளக்கவுரையில்,

"பாங்கன் முதலாயினாரை இச்சூத்திரம் கூறுப:
தலைமகள் கூற்று தனித்துக் கூறுதல் வேண்டும்,
இவரோடு ஒரு நிகரன்மையின் எனின், ஒக்கும்
துலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம்

காலப் பழமையால் பெயர்த்தெழுதுவார் விழ எழுதினார் போலும்"

என்று கூறுவதை நோக்குமிடத்து இவ்விடத்தே தலைவிக்கு தனிச் சூத்திரம் கூற வேண்டும் என்பதும், அத்தகைய சூத்திரம் ஒன்று இருந்து ஏடு பெயர்த்து எழுதுவோரால் விடப்பட்டிருக்க வேண்டும் என்பதும் அவருடைய துணிவாகப் பெறப்படுகின்றன.

"நிகழ்ந்தது நினைத்தற்கு…" என்ற 46வது நூற்பா பிரிதல் பற்றியதாக அமைந்துள்ளது. அதாவது முன்னர் நடந்தவற்றை நினைப்பதாக அமைந்துள்ளது. "நிகழ்ந்தது கூறி…" எனும் 47வது நூற்பாவில் பாலைத்திணையில் தலைவன் பிரிவைத் தவிர்ப்பதற்காக முன்பு நடந்த நிகழ்ச்சியைக் கூறுவதாக உள்ளது. "மரபுநிலை திரியா…" என்ற 48வது நூற்பாவில் மரபைப் பின்பற்றுதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

"உள்ளுறை உவமம் ஏனை…" எள்ற 49வது நூற்பா உள்ளுறை உவமம், ஏனை உவமம் பற்றிக் கூறுகிறது. "உள்ளுறைத் தெய்வம்…" என்னும் 50வது நூற்பாவில் உள்ளுறை உவமம் என்றால் என்ன என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. "உள்ளுறுத்து இதனோடு…" எனும் 51வது நூற்பாவிலும் உள்ளுறை உவமம் பற்றியே வருகிறது. அடுத்ததாக "ஏனை உவமம்…" என்னும் 52வது நூற்பாவில் ஏனை உவமம் பற்றிக் கூறப்படுகிறது. ஆகவே 49 – 52 வரை கவிதை அமைப்பிற்குரிய அழகியல் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவை பற்றி விரிவாக உவமையியலில் பின்னர் கூறினாலும் அகத்திணையியல் கவிதைக் கோட்பாட்டுக்கு அழகியல் முக்கியம் என இங்கும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்ததாக "காமம் சாலா இளமை…" என்ற 53வது நூற்பாவில் கைக்கிளை பற்றியும்,"ஏறிய மடல்திறம்…"என்ற 54வது நூற்பாவில் பெருந்திணை பற்றியும் கூறியுள்ளார். அகத்திணை கவிதைக் கோட்பாட்டில் இவையும் முக்கியம் என்பதால் தொல்காப்பியர் இவற்றையும் கொள்கிறார். "முன்னைய நான்கும்…" என்ற 55வது நூற்பாவில் முன்னர் கூறப்பட்ட நான்கும் என கூறுகிறார் தொல்காப்பியர். அதில் கைக்கிளை பெருந்திணை என்பவற்றை எடுப்பதா அல்லது வேறு எதையும் எடுப்பதா என்று உரையாசிரியர்கள் இடையில் உரை வேறுபாடு உள்ளது. இந்நூற்பாவும் இடம் மாறி வந்துள்ளது எனக் கருதலாம். "நாடக வழக்கினும்…" என்ற 56வது நூற்பாவில் ஒரு கவிதைக் கோட்பாட்டிக்கு நாடகவழக்கு, உலகியல் வழக்கு, பாடல் சார்ந்த புலனெறி வழக்கு என்பன முக்கியம். அவற்றில் கலி,பரிபாட்டு என்பன கவிதை கோட்பாட்டில் இன்றியமையாதது என்பதும் கூறப்பட்டுள்ளது.

"மக்கள் நுதலிய…" என்னும் 57வது நூற்பாவில் பெயர் சுட்டாப் பண்பு கூறப்பட்டுள்ளது. "புறத்திணை மருங்கின் பொருந்தின்…" என்ற 58வது நூற்பாவில் ஒருவருக்கு உரித்தாக வரும் பெயர் அகத்திணையில் இல்லை. அது புறத்திணையாகவே கொள்ளப்படும் எனக் கூறபப்படுகிறது. எனவே ஒட்டுமொத்தமாக நோக்கினால் நூற்பா வைப்புமுறையில் சில மாறுபாடுகளும் சிக்கல்களும் இருப்பதை உணரமுடிகிறது.

**முடிவுரை**

தொல்காப்பியம் தமிழ் இலக்கண மரபின் முதன்மை நூலாக விளங்கினாலும், அதன் நூற்பா வைப்புமுறையில் காணப்படும் சிக்கல்கள் ஆய்வாளர்களிடையே பல சிக்கல்களை உருவாக்கியுள்ளன. நூற்பாக்களின் வரிசை, துறைப்பிரிப்பு, இடமாற்றம், பின்னர் செய்யப்பட்ட தொகுப்பு மாற்றங்கள் போன்றவை நூலின் ஒருமைப்பாட்டைப் புரிந்து கொள்வதில் சவால்களாக அமைகின்றன. ஆயினும் இச்சிக்கல்கள் தொல்காப்பியத்தின் பெருமையைக் குறைப்பவை அல்ல. மாறாக, அதன் பழமையும் ஆழமும் எத்தனை விரிவான ஆய்வுகளைத் தாங்கக் கூடியது என்பதைக் காட்டுகின்றன. இந்த அடிப்படையில் ஆய்வு செய்யும் போது, தொல்காப்பியம் ஒரு இலக்கண நூலாக மட்டுமல்லாமல், தமிழ்ச் சிந்தனை மரபின் அடையாளமாகயும் வெளிப்படுத்தப்படுகின்றது.

**உஷாத்துணைகள்**

[1] மணவாளன்.A, தொல்காப்பியம் பொருளதிகாரம் (கருத்துரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும்), உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

[2] தமிழண்ணல்,2010,தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி 1, மீனாட்சி புத்தக நிலையம்.



© 2026, IRJTSR